## ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு II - 2022

---

ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு II இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 16 ஆம் திகதிய 8878 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் (அ) ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை மீளமைத்து வலுப்படுத்தும் மூலோபாயங்களை அமுல்ப்படுத்துதல் (ஆ) அமுல்ப்படுத்தல் ஆதரவு மற்றும் புத்தாக்க மானியங்கள் மற்றும் (இ) நிச்சயமற்ற அவசரகால நிலைமை பதிலளிப்பு ஆகிய பெயர்களிலான 03 பகுதிகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 697,936.86 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 4,419 மில்லியனானதுடன் அதில் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதில் ரூபா 2,368.27 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 15.00 மில்லியன் செயற்திட்டக் கூறு - II இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இக் கூறிற்கான ஒதுக்கீடு முன்னைய ஆண்டின் போது ஐ.அ.டொலர் 6.00 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 பெப்ரவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தி 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 5 இன் 43 (அ) பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும். எனினும், செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடன் தொடர்பான நாணயமாற்று சமநிலை சீராக்கங்கள் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 106.7 மில்லியன் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சீஎஸ்-டிஆர்எம்எஸ் அறிக்கை 814-1(வி2) இன் பிரகாரம் வட்டிச் செலவினங்கள் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் செலுத்தப்படுகின்றன. தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளவும் செலவினத்தை மீளக் கணக்கீடு செய்யவும் அவசியமில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்ற வேண்டியதுடன் மீதிகள் சமப்படுத்தப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண இல. 753(1) மற்றும் 753(2) | செயற்திட்டத்தில் பொருட்களை வழங்குதல் மற்றும் பெறுதல் ஆகிய 16 சந்தர்ப்பங்களிற்கு நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட்டிருக் கவில்லை. | பெறப்பட வேண்டியிருந்த 16 வழங்கல் கட்டளைகளில் செயற்திட்ட அலுவலகத்தால் ஐந்து பெறுதல் கட்டளைகள் பெறப்பட்டுள்ளன. மீதமுள்ள 12 வழங்கல் கட்டளைகளிற்கு இன்னும் பெறுதல் கட்டளைகளை அனுப்பாத நிறுவனங்களின் தலைவர்களிற்கு விரைவாக பெறுதல் கட்டளைகளை அனுப்புவதற்கு அறிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபா 77 மில்லியன் (வரி தவிர்த்து) 600 டிஜிட்டல் சிக்னேஜ் (signage) முறைமைகளை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்புக்கான சலுகை 2021 மே 07 இல் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 17 மில்லியன் இறுதிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு திகதியான 2023 மே 22 இல் இந்த 600 டிஜிட்டல் சிக்னேஜ் முறைமைகளில் 285 முறையான செயற்பாட்டு நிலையில் காணப்படாதமை வெளிப்படுத்தப்பட்டது. | மீதமுள்ள 285 டிஜிட்டல் சிக்னேஜ் முறைமைகளை மத்திய ஒலிபரப்பு முறைமையுடன் இணைப்பதற்கு, சுகாதாரக் கல்வி பணிப்பாளரால் விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நோக்கத்திற்காக, டிஜிட்டல் சிக்னேஜ் முறைமையின் செயற்பாட்டை உன்னிப்பாகக் கண்காணிப்பதற்கு மாவட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. | அதை உடனடியாக திருத்தம் செய்து பயன்படுத்த வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் பெப்ரவரி 09 முதல் 10 வாரங்களுக்கு ஒன்லைனில் நடைபெற்ற "LSE பொதுக் கொள்கை பகுப்பாய்வு" என்ற கற்கைநெறியில் பங்கேற்ற 05 உத்தியோகத்தர்களுக்கு லண்டன் பாடசாலைக்கு ரூபா 2.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த கற்கைநெறிக்கு இந்த நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டதன் அடிப்படையில் எந்த சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் லண்டன் பாடசாலை வழங்கிய சான்றிதழ்கள். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரதி பணிப்பாளர் நாயகம், கொள்கைப் பகுப்பாய்வு பணிப்பாளர் மற்றும் அதே பிரிவின் உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பரிந்துரைக்கப்பட்டனர். | தெரிவுசெய்யப்பட்ட அளவுகோல்கள் மற்றும் ஏனைய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 07 இல் ரூபா 178,000 பெறுமதியான மடிக்கணனி தொலைந்து போயிருந்தது. நிதிப்பிரமாண இல. 104(3) மற்றும் 104(4) என்பவற்றின் பிரகாரம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான ஆரம்ப அறிக்கை 2022.09.26 இல் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நி.பி. 104(4) இன் பிரகாரம் 2022.01.10 இல் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் விசாரணை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது, விசாரணையின் முன்னேற்றம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படும். | நிதிப்பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுப்படுத்தல் செயற்திட்டத்தின் சிரேஷ்ட தொடர்பாடல் உத்தியோகத்தரிற்கு செயற்திட்டத்தின் மூலம் செலுத்த வேண்டிய சம்பளத்தை விட ரூபா 453,337.37 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை தவணை முறையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்திருந்த போதிலும் அவ்வாறான கடிதம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடையும் என்பதால், அதற்கு முன்னதாக மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம் அறவிடப்பட வேண்டும் என்றும், இந்த மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம் எவ்வாறு வழங்கப்பட்டது என்பது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட அலுவலகத்தின் பரிந்துரையின் அடிப்படையில், சிரேஷ்ட தொடர்பாடல் உத்தியோகத்தரிற்கு மேறலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை தவணை அடிப்படையில் அறவிடுவதற்காக சுகாதார செயலாளரால் முடிவு செய்யப்பட்டது. எனினும், சுகாதார அமைச்சின் பிரதம நிதி அதிகாரி, செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரால் அறவிடுவதற்கான ஆலோசனை வழங்கும் உத்தியோகத்தர் ஆகியோருக்கு முறையான கடிதங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | செயற்திட்டம் பூர்த்தியடைவதற்கு முன்னர் மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம் அறவிடப்பட வேண்டும், இது தொடர்பாக பொறுப்பான நபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |